[வலைப்பின்னல் மாற்றுமுறை]

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1999 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கி (திருத்தச்) சட்டம்

---

[*1999, ஒகத்து மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1999, ஒகத்து மாதம் 13 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை:** *ரூபா 7.75*                **தபாற் செலவு :** *ரூபா 3.50*

**1999 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கி (திருத்தச்) சட்டம்**

*1999 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதி அத்தாடசிப் படுத்தப்பட்து.]*

*ச.வ. - ஓ. 8 /98*
*4493*

**1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க,தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க், தேசிய சேமிப்பு வங்கி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *கருக்கப் பொயர்*

2. (இதனகத்துப்பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க், தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- *1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், “வங்கியின் இலச்சினை” என்ற சொற்களுக்குப் பதிலாக, “நான்காம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, வங்கியின் இலச்சினை” என்ற சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும்:-

“(4) சுகவீனம், இலங்கையில் தற்காலிகமாக இல்லாமை அல்லது சபையின் உறுப்பாண்மையில் வெற்றிடங்கள் இருக்கின்றமை என்பன காரணமாக, (3) ஆம் உட்பிரிவின்கீழ் இலச்சினையைப் பொறித்தலானது இரு உறுப்பினாகளின் முன்னிலையில் செய்ய முடியாததாக இருக்குமிடத்து, இலச்சினை யானது, ஓர் உறுப்பினரினதும் வங்கியின் பொது முகாமையாளரினதும் முன்னிலையில் ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப் படலாம்”

முதன்மைச் சட்டவாக்கதின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலதும்:-

"(1) வங்கி அதன் பிரதான தொழிலிடத்தைக் கொழும்பில் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், வங்கித்தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய முகவராண்மைகளையும் , முகவர்களையும் நியமிக்கலாம், அத் துடன் வைப்புக்களைத் திரடடும் நோக்கத்துக்காக, இல்ங்கைக்கு வெளியே முகவர்களை நியமித்துப் பிரதிநிதித்துவ அலுவலகங்களையும் தாபிக்கலாம்," அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "முகவர் நிலையமாக அல்லது முகவராக நியமிக்கலாம் " என்ற சொற்ளுக்குப் பதிலாக, "முகவராக நியமிக்கலாம்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கதின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) "இச்சட்டதிதின் ஏற்பாடுகளுக்கமைவாக" என்ற சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்திக் ஏற்பாடுகளுக்கும், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளும் அல்லது வழங்கப்பட்ட பணிப்புகளும் உட்பட வேறு ஏதேனும் சட்டத்துக்கும் அமைவாக", என்ற சொற்களை இடுவதன் முலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "வைப்புக் கணக்குகளையும் சேமிப்புக் கணக்குகளையும் திறத்தல் மற்றும் சேமிப்புச் சான்றிதழ்கள் வழங்குதல்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "சேமிப்புச் சான்றிதழ்கள் அல்லது சேமிப்புகளைத் திரட்டுவதற்கு வங்கியை இயலச் செய்கின்ற வேறேதேனும் சாதனம் அல்லது பொருள் என்ற சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், "அவர்களது பணவைப்புக்களின் பிணைப் பொறுப்புக் கெதிராக" என்ற சொற்களுக்குப் பதிலாக, "அவர்களது பண வைப்புக்களின் பிணைப்பொறுப்புக்கெதிராக அல்லது சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான வேறேதேனும் பிணைப்பொறுப்புக்கெதிராக அல்லது உத்தரவாத்துக் கெதிராக" என்ற சொற்களை இடுவதன் மூலமும்;

(4) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் "பிணைப்பொறுப்பின் மீது வீடமைப்புக் கடன்களை" என்ற சொற்களுக்குப் பதிலாக, "பிணைப்பொறுப் பின்மீது வீடமைப்புக் கடன்களை அல்லது வர்த்தகம் சாரா நோக்கங்களுக்கான வேறு கடன்களை" என்ற சொற்களை இடுவதன் மூலம்;

(5) அவ்வுட் பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் "அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனத்தைக் கொள்ளுதல் அல்லது அத்தகைய ஆதனத்திலுள்ள எவையேனும் உரிமைகளைக் கொள்ளுதல்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "அசைவற்ற அல்லது அசைவுள்ள ஏதேனும் ஆதனத்தை அல்லது அத்தகைய ஆதனத்திலுள்ள எவையேனும் உரிமைகளைக் கொள்வனவு செய்தல், குத்தகைக்கெடுத்தல், கொடுத்து மாற்றுதல், கேள்வுக்கெடுத்தல் அல்லது வேறுவகையில் கொள்ளுதல் என்ற சொற்களை இடுவதன் மூலமும்;

(6) அவ்வுட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

(ஒ) சபையால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங் களினாலும் விலைகோரப்பட்ட கம்பெனிகளினாலும் வழங்கப்பட்ட அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட நிதிச்சாதனங்களில் வியாபாரம் செய்தல்;'' ;

(7) அவ்வுட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியை உடனத்துப் பின்வரும் புதிய பநிதிகளைச் சேப்பதன் மூலமும் :

"(ஓ) நடுத்தரக்கால மற்றும் நீண்டகாலக் கருத் திட்டக் கடன் கொடுக்கும் நோக்கத்துக்காக, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற விசேடித்த வங்கிகளுக்கும் மீள்நிதியளித்தல் வாதிகளை ஏற்பாடு செய்தல்;

(ஔ) வைப்புகளுக்கெதிராக உத்தரவதக் கடிதங் களை வழங்குதல்;

(க) உளளூர் மற்றும் சர்வதேச்க கடன் வழங்கு நிறுவனங்களிடமிருநது அல்லது முகவர் நிலையங்களிடமிருநது பணம் கடன் பெறு தல்;

(ங) லொத்தர்களையும் பரிசுப்போட்டிகளையும் நடாத்துதல்;

(ச) ஏதேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியின், உரிமம்பெற்ற விசேடித்த வங்கியின், ஏதேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியின் அல்லது உரிமம்பெற்ற விசேடித்த வங்கியின் துணைநிலை வங்கியொன்றின் ஒப்புரவு மூலதனத்தில் அல்லது உரிமம்பெற்ற பங்குத் தொகுதி பரிவர்ததன ஒன்றில் நிரற்படுத்தப்பட்ட அல்லது நிரற்படுத்தலை நாடுகினற ஏதேனும் பகிரங்கக் கம்பனியில் முதலீடு செய்தல்;

(ஞ) வதிவற்றோருக்கான ரூபாக் கணக்குகளைத் திறத்தல்;

(ட) வைப்பாளர்களிடமிருநது வெளிநாட்டு நாணயத்தைச் சேகரித்தலும் மாற்றுதலும்;

(ண) வாடிக்கையாளர்களுக்குக் காப்பான கட்டுக்காப்பு மற்றும் காப்பான வைப்புப் பெட்டி வசதிகளை ஏற்பாடுசெய்தல்;

(த) பணச்சபையினால் தீர்மானிக்கப்படக் கூடிய வாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய அடகு பிடித்தல் தொழிலைப் பொறுப்பேற்றல்;

(ந) பணக் கைமாற்றல்களுக்கான வசதிகளை ஏற்பாடு செய்தல்;

(ப) பணச்சபையில் எழுத்திலான அங்கீகாரத்தோடு துணைநிலைக் கம்பனிகளைத் தாபித்தல்;

(ம) நம்பிக்கைப்பொறுப்பு மற்றும் மரணச் சொத்து நிருவாகத்தைப் பொறுப்பேற்றல்,;

(ய) மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட பணிகளின் மற்றும் செயற்பாடுகளின் இடை நேர்விளைவாக அல்லது அவற்றுக்கு உகந்தனவாக இருக்கக்கூடியவாறான அத்தகைய வேறு செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துதல்."

*முதன்மைச் சட்டவாக்கதின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**, ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு,அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "வங்கியின் பொது முகாமையாளராக நியமித்தல் வேண்டும்." என்ற சொற்களுக்குப் பதிலாக, "வங்கியின் பொது முகாமையாளராக நியமித்தல் வேண்டும்; அவரே வங்கியின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும்." என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 26 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**6**, முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்படுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாகத்தின் 26 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:–

"பொது முகாமையாளருக்கும் வேறெவரேனும் அலுவலருக்கும் தத்துவங்களைக் கையளித்தல்

26.அ(1) சபையானது, காலத்துக்குக் காலம், அதற்கென ஆக்கப்படும் தீர்மானத்தின் மூலம், வங்கியின் பொது முகாமையாளருக்கு அல்லது வேறு எவரேனும் அலுவலருக்கு, அதன் பணிகளுள் அல்லது செயற்பாடுகளுள் எவற்றையும், அத்தகைய தீர்மானத்தில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியதி, நிபந்தனைகளுக்கமைய கையளிக்கலாம் என்பதுடன், சபையானது, அத்தகைய ஏதேனும் கையளித்தலை இல்லா தொழிக்கலாம் அல்லது மீளப்பெறலாம்.

(2) வங்கியின் பொது முகாமையாளருக்கு அல்லது வேறெவரேனும் அலுவலருக்கு (1) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளித்தலைப் பொருட்படுத்தாது, சபையானது, அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் பணியை நிறைவேற்றுவதற்கான அல்லது செயற்பாட்டைப் புரிவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்."

*முதன்மைச் சட்டவாக்கதில் 41 ஆம் பிரிவை மாற்றடு செயதல்*

7. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"செலுத்தப் படவேண்டிய வட்டி*

41.கோரப்படாத வைப்புகள், ஒதுக்குக் கைமாற்றப்பட்ட பணங்கள் உட்பட வங்கியின் வைப்பிலிடப்பட்ட பணங்கள்மீது, பணமானது அத்தகைய கோரப்படா வைப்புகள் ஒதுக்கில் இருந்த காலப்பகுதிக்காக, சபையினால் தீர்மானிக்கப்படவேண்டிய வீதங்களில் வங்கியினால் வட்டி செலுத்தப்படுதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 42 ஆம் புதிய பிரிவை மாற்றீடு செய்தல்.*

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"வட்டி தவிர்ந்த கொடுப்பனவுகள்.*

42. சபையானது, அது குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வகுப்பினவான கணக்குகளின் மீதும், அத்துடன் அது தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வீதங்களிலும் வட்டி தவிர்ந்த கொடுப்பனவுகளைச் செய்யலாம்.

*முதன்மைச் சட்டவாக்கதின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

9. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "கணக்கில் இருந்த பணத்தொகைக்குச் சமமான பணத்தொகையொன்றைக் கோரிக்கை செய்பவருக்குக்

கொடுத்தல் வேண்டும் என்பதுடன்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "கணக்கிலிருந்து தொகைக்குச் சமமான தொகை யொன்றை 41 ஆம் பிரிவின்கீழ சபையினால் தீர்மானிக்கப்படு கின்றவாறான வீ தங்களுக்கிணங்கக் கணக்கிடப்பட்ட வட்டியுடன் சேர்த்து கோரிக்கை செய்பவருக்குச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன்" என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் புதிய பிரிவை உட்புகுத்தல்

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 87 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படு கின்றதென்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"அடகு பிடிப்போர் கட்டளைச் சட்டம் ஏற்புடைய தாகாதிருத்தல்.

79. (தொண்ணூறாம் அத்தியாயமான) அடகு பிடிப்போர் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், வங்கியினால் பொறுப்பேற்கப்பட்ட அடகுபிடித்தல் தொழில் தொடர்பில் ஏற்புடையனவாதலாகாது."

முதன்மைச் சட்டவாக்கதின் 87 ஆம்பிரிவைத் திருத்துதல்.

11. ஆயிரத்துத் தொளாயிருத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 87 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) "பாதுகாவலர்" என்ற சொல்லின் வரைவிலக் கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக் கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"உரிமம்பெற்ற வர்த்தக வங்கி" மற்றும் "உரிமம் பெற்ற விசேடித்த வங்கி" என்பன முறையே 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்திலுள்ள அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்; '';அத்துடன்

(2) "சேமிப்புச் சான்றிதழ்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"சேமிப்புச் சாதனம் அல்லது பொருள்" என்பது, சேமிப்புக்களைத் திரட்டுவதற்கு வங்கியை இயலச்செய்கின்ற ஏதேனும் சாதனம் அல்லது பொருளென்று பொருளாகும்; ".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலேங்கி நிற்றல்.*

12. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*